DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 264 / 2015
Deposition of PW7/ LW8

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ஜோதிசுப்பிரமணியம் |
| Father's Name | : | ஜெயஜோதிராஜ் |
| Village | : | தேனி |
| Taluk | : | தேனி |
| Calling | : | சார்பு ஆய்வாளர் |
| Religion | : | இந்து |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13.02.2025.
2 முதல் 6 வரையுள்ள எதிரிகள் ஆஜர் . 1 வது எதிரி இறப்பு.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1.) நான் தற்போது தேனி மாவட்ட Q– பிரிவு குற்ற புலனாய்வு துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கண்டமனூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 28.04.2015 ம் தேதி 18.00 மணிக்கு கோரையூத்தைச் சேர்ந்த சின்னச்சாமி மகன் பால்கண்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று கண்டமனூர் காவல் நிலைய குற்ற எண். 115/2015 இதச பிரிவுகள் 147,447,341,294(பி),506(2) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3.** முதல் தகவல் அறிக்கையின் நகலையும் வாதியின் புகாரினையும் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

2.) பின்பு இவ்வழக்கினை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினமே 19.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான

தவம் மற்றும் சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5.** பின்பு சாட்சிகள் 1 பால்கண்ணன் , 2 பாஸ்கரன், 3 அழகு, 4 குமரேசன், 5 வைரம் , 6 தவம், 7 சுரேஷ் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3.) எதிரிகள் அனைவரும் முன்பிணையில் பெற்றதால் அவர்களை நான் கைது செய்யவில்லை. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து மேற்படி பிரிவுகளின் கீழ் 11.05.2015 அன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1.) சம்பவயிடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எத்தனை தூரம் இருக்கும் என்றால் சுமார் 7 கி.மீ. தொலைவு இருக்கும். சம்பவயிடமானது காவல் நிலையத்தில் இருந்து எந்த திசையில் இருக்கிறது என்றால் காவல் நிலையத்திற்கு தென்கிழக்கில் உள்ளது. சம்பவயிடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு 15 நிமிடங்களில் வந்துவிடலாம் என்றால் சரிதான். சம்பவிடத்தின் சர்வே எண்.283, 284, 290 என்றால் சரிதான்.

2.) மேற்கண்ட சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என நான் எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றதில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. சொத்து தொடர்பான உரிமையியல் வழக்கு ஆண்டிபட்டி உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

4.) மேற்படி சொத்துக்கள் எதிரிகளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், புகார்தாரரிடம் பொய்யான புகாரினை பெற்றுக் கொண்டு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவயிடம் சென்றது எத்தனை மணிக்கு என்றால் 18.30 மணிக்கு சென்று 19.00 மணிக்கு வரைபடம் தயார் செய்தேன்.

பார்வை மகஜர் சாட்சிகள் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் இருப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கின் ஆவணங்களை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில், சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

S/d.ஜோதிசுப்பிரமணியம்

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.02.13 18:26:00 +0530

Judicial Magistrate (FAC),
Andipatti.